இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 167 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 14 – திங்கள்கிழமை 27 ஜனவரி 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 167 : Thiruvalluvar Year - 2056 - Thai 14 - Monday 27 January 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.1.2025) செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரத்தில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். இக்கூட்டத்தில், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, திருமதி வரலட்சுமி, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், தலைமைக் கழக நிர்வாகிகள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாட்டின் மீது அரசியல் – பொருளாதார – சமூக – பண்பாட்டுப் படையெடுப்பை ஒன்றிய பா.ஜ.க. அரசு நடத்துகிறது! எதற்கும் அஞ்சாது தி.மு.க.!

# யு.ஜி.சி. நெறிமுறைகளுக்கு எதிராக கழக மாணவர் அணி டெல்லியில் போராட்டம்!

## பல்லவபுரம் – வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**சென்னை, ஜன. 27-**

**“தமிழ்நாட்டின் மீது, அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டுப் படையெடுப்பை ஒன்றிய பா.ஜ.க. அரசு நடத்திக் கொண்டு இருக்கிறது!” என்றும், “அதற்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகம் எந்த மிரட்டலுக்கும் அஞ்சாமல் போராடிக் கொண்டு இருக்கிறது!” என்றும், “யு.ஜிசி. வரைவு நெறிமுறைகளுக்கு எதிராக கழக மாணவரணி சார்பில் தலைநகர் டெல்லியில் மாபெரும் போராட்டம் நடைபெறும்!” என்றும் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

நேற்று முன்தினம் (25-01-2025) பல்லாவரத்தில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய எழுச்சியுரை வருமாறு:-

- **“வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்!”**
- **“உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு!”**
- **“ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடிவந்த கோழையுள்ள நாடிதல்லவே!”**

– என்று முழக்கங்களை எழுப்பி, தமிழ்நாட்டின் தெருக்களில் திரண்டு வந்து தங்கள் இன்னுயிரைத் தந்து தமிழைக் காத்த மொழிப்போர் மறவர்களுக்கு முதலில் என்னுடைய வீரவணக்கம்! தமிழ் வணக்கம்! தமிழ்த் தாயின் தியாகப் பிள்ளைகளே! தலைப் பிள்ளைகளே! உங்களை வணங்குகிறேன்!

**தந்தை கட்டிய கட்டிடம்! தனயன் அமைக்கும் சிலைகள்!**

இன்று காலை மூலக்கொத்தளத்தில் மொழிப்போரின் முதல் தியாகிகள் நடராசன் - தாளமுத்து ஆகியோரின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தைத் திறந்து வைத்து, என்னுடைய வணக்கத்தைச் செலுத்திவிட்டுதான் இந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கிறேன்.

எழும்பூரில் இருக்கும் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட ‘தாளமுத்து - நடராசன் மாளிகை’யில் அவர்களின் திருவுருவச் சிலைகளையும் நம்முடைய அரசு விரைவில் நிறுவ இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் அவர்கள் எடுத்து வைத்த கோரிக்கை இது.

**டாக்டர் தருமாம்பாள் சிலையின் முன் - நான் செலுத்திய வணக்கம்!**

கட்டாய இந்தியை எதிர்த்து, மறியல் நடத்தி, ஊர்வலம் சென்றதற்காக சிறைத் தண்டனை பெற்றவர் டாக்டர் தருமாம்பாள் அவர்கள். இந்தி எதிர்ப்புப் போரில் பெண்கள் பங்கேற்பின் அடையாளங்களில் ஒருவர். அவரின் நினைவிடத்திலும் என்னுடைய வணக்கத்தைச் செலுத்தினேன்.

**தீரர்களே! எங்களை இயக்குவது நீங்களன்றோ!**

திராவிட இயக்கத் தீரர்களே... மொழிப் போர் வீரர்களே... உங்கள் தியாகம்தான் இன்றைக்கும் எங்களை இயக்கிக் கொண்டு இருக்கிறது! பல்வேறு காலக்கட்டங்களில் இந்தித் திணிப்பை எதிர்த்து நாம் நடத்திய தியாக வரலாறுதான், மொழிப்போர்!

இன்றைக்கும், வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், இந்தியைத் திணிக்கலாமா சமஸ்கிருதத்தைத் திணிக்கலாமா என்றுதான் ஒன்றிய ஆட்சியாளர்கள் முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள்.

**தந்தை பெரியார் - தமிழர்க்குக் கூறிய அறிவுரை!**

அன்னைத் தமிழை அழிக்க அந்நிய இந்தி நுழைக்கப்படுகிறது, 1938ஆம் ஆண்டு இந்தித் திணிப்பு தொடங்கியபோது இந்தித் திணிப்பை கடுமையாக எதிர்த்து தந்தை பெரியார் சிறை சென்றார்.

**‘பண்பாட்டுப் போராட்டம்’ என எழுச்சியூட்டிய தந்தை பெரியார்!**

நடராசனும் தாளமுத்துவும் சிறைக்களத்தில் உயிர்த் தியாகம் செய்தார்கள்! “இது அரசியல் போராட்டம் அல்ல, பண்பாட்டுப் போராட்டம்” என்று தந்தை பெரியார் அடையாளப்படுத்தினார். அதுமட்டுமல்ல, எச்சரிக்கையாக ஒன்றைச் சொன்னார். “இந்தியை அல்ல, எத்தனை மொழிகளை திணித்தாலும் தமிழ் அழிந்துவிடாது. ஆனால், தமிழனின் பண்பாடு அழிந்து போகும்” என்று சொன்னார்.

**அண்ணா - தமிழர்களின் நிலை உருகி கசிந்த வரிகள்!**

அதை முறியடிக்கத்தான் 1948ஆம் ஆண்டு மொழிப் போராட்டத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்து நடத்தினார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் உறுதியாக ஒன்றைச் சொன்னார்.

“மொழி ஆதிக்கம், நிர்வாக ஆதிக்கத்துக்கு இடமேற்படுத்தும். அது பொருளாதார ஆதிக்கத்துக்கு வழிகோலும். பிறகோ, தமிழர்கள் அரசியல் அடிமையாகித் துன்பப்படுவார்கள்” என்று சொன்னார்.

அடுத்து, மூன்றாவது இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டமான 1963ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுத் தலைவராக முத்தமிழறிஞர் கலைஞரை தலைமைக் கழகம் அறிவித்தது. தமிழ்நாடு முழுவதும் மறியல் போராட்டம் - சட்டப் பிரிவு நகலை எரிக்கும் போராட்டம் என்று இந்தி எதிர்ப்புப் போரை நடத்தினார் தலைவர் கலைஞர் அவர்கள்! இவ்வாறு தமிழ்நாடு முழுவதும் 1963 64 65 ஆகிய மூன்றாண்டு காலம் நடந்த மொழிப் போராட்டத்தின் மையப் புள்ளியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தது.

**தமிழ் மொழிப் போரில் இன்னுயிர் சிந்திய தீரர்கள்!**

அதனால்தான், 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தூண்டியதாக இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தலைவர் கலைஞர் பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த மூன்றாவது மொழிப் போர்க்களத்தில், ஏராளமான கழகத் தொண்டர்களும், மொழி உணர்வாளர்களும் தங்கள் உயிரைக் கொடுத்துப் போராடினார்கள்!

* கீழப்பழுவூர் சின்னச்சாமி

* கோடம்பாக்கம் சிவலிங்கம்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# வேங்கைவயல் சம்பவம்: வதந்திகளைப் பரப்பிட வேண்டாம்!

## தமிழ்நாடு அரசு வேண்டுகோள்!

**சென்னை, ஜன. 27 -**

**“புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் சம்பவத்தில் தனிப்பட்ட விரோதத்தால் 3 பேர் இக்குற்றத்தில் ஈடுபட்டுள்ளனர். எனவே இதுகுறித்து தவறான தகவல்களை பரப்பிட வேண்டாம்” என்று தமிழ்நாடு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் பட்டியலின மக்களுக்கான மேல்நிலை குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்டதாக கடந்த 2022 டிசம்பர் மாதம் புகார்கள் எழுந்தன. இக்கிராமத்தைச் சேர்ந்த குழந்தைகள் சிலர் வாந்தி மற்றும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாகவும், காவேரி நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், மேலும் அதே கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மீது ஏறிப் பார்த்ததில், மேல்நிலை நீர்த்தேக்க நீரில் மலக்கழிவுகள் மிதப்பதாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்து, இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளிக்கப்பட்டதன் அடிப்படையில், வெள்ளானூர் காவல் நிலைய Cr.No.239/2022ல் 26.12.2022 ஆம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டின் தீவிரத்தையும், சமூக முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அவர்கள் இவ்வழக்கின் புலன் விசாரணையை 14.01.2023 அன்று தமிழ்நாடு குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு மாற்றினார். அதைத் தொடர்ந்து, கூடுதல் காவல் துறை இயக்குநர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அவர்கள் உத்தரவின் பேரில், துணைக் காவல் கண்காணிப்பாளர் நிலையிலான அதிகாரியை புலனாய்வு அதிகாரியாக நியமித்து, புதுக்கோட்டை குற்ற எண்.01/2023ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணையின்போது, புகார்தாரர் மற்றும் அவரது உறவினர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்டதோடு, ஏராளமான ஆவணங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இதைத்தவிர, பல நபர்களின் அலைபேசி எண்கள் மற்றும் தொலைத்தொடர்பு தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. வேங்கைவயல், எறையூர் கிராம மக்களிடம் இதற்கான பல்வேறு காரணங்கள் குறித்தும் விரிவாக விசாரிக்கப்பட்டது. மேலும், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சில நபர்களிடமிருந்து உயிரியல் மாதிரிகள் எடுக்கப்பட்டு, விரிவான டி.என்.ஏ பகுப்பாய்வும் செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை மற்றும் பகுப்பாய்வுகளின் அடிப்படையில், பின்வரும் விவரங்கள் உறுதி செய்யப்பட்டன:

- சம்பவம் நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு, 02.10.2022 அன்று வேங்கைவயலில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பராமரிப்பு குறித்து கேள்வி எழுப்பியதற்காக முத்துக்காடு ஊராட்சித் தலைவர் பத்மா என்பவரின் கணவர் முத்தையா என்பவர் கிராம சபைக் கூட்டத்தின் போது, தமிழ்நாடு காவல் துறை ஆயுதப்படைப் பிரிவில் பணியாற்றும் காவலர் முரளிராஜாவின் தந்தை ஜீவானந்தம் என்பவரை அவமானப்படுத்தும் விதமாகத் திட்டியுள்ளார். இச்சம்பவத்திற்கு பழிவாங்கும் வகையில் முரளிராஜாவால் இச்செயல் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டது என்பது காவல் துறையின் விசாரணையின் மூலம் ஆதாரப் பூர்வமாக புலனாகியுள்ளது.
- மேலும், இச்சம்பவத்தில் முரளிராஜா, சுதர்ஷன், முத்தையா, ஆர்.முத்துகிருஷ்ணன் மற்றும் பலரின் கைப்பேசிகள் பறிமுதல் செய்யப்பட்டு, தமிழ்நாடு தடயவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட போது, அவற்றில் இந்தச் சம்பவம் தொடர்பான பல புகைப்படங்களும், உரையாடல்களும் அழிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இந்தத் தகவல்கள் அனைத்தும் தொழில்நுட்ப உதவியோடு மீட்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதில், இச்சம்பவத்தில் அவர்களுக்குள்ள தொடர்பு உறுதி செய்யப்பட்டது.
- இச்சம்பவம் தொடர்பான விசாரணையில் பெறப்பட்ட புகைப்படங்கள், செல்போன் உரையாடல்கள், வீடியோ ஆதாரங்கள், தடயவியல் அறிக்கை, மருத்துவ அறிக்கைகள், புலனாய்வு அதிகாரியால் செய்யப்பட்ட செயல்முறை விளக்கங்களின் முடிவுகள், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அறிக்கை, வல்லுநர்களின் கருத்துகள் மற்றும் சாட்சிகளின் அறிக்கைகள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்ததின் அடிப்படையில், புலன் விசாரணை முடிக்கப்பட்டு (i) முரளிராஜா, த/பெ. ஜீவாநந்தம், 32/23, வேங்கைவயல், (ii) சுதர்ஷன் 20/23, த/பெ. பாஸ்கரன், வேங்கைவயல் மற்றும் (iii) முத்துகிருஷ்ணன் 22/23, த/பெ. கருப்பையா, வேங்கைவயல் ஆகியோரின் மீது, 20.01.2025 அன்று நீதிமன்றத்தில் சிபிசிஐடி சார்பில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே, இதுதொடர்பாக தவறான தகவல்களை யாரும் பரப்பிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.